பிரஸாா் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 02 2026 SATURDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக இன்று மலேசியா செல்கிறார்.

2. தேசிய பருப்பு வகைகள் தன்னிறைவு இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான தேசிய மாநாடு, மத்தியப் பிரதேச மாநிலம் அம்லஹாவில் இன்று நடைபெறுகிறது.

3. சட்டப்பேரவை தேர்தல் நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை மத்திய பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

4. மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்வதாக மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

>>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக இன்று மலேசியா செல்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியாவிற்கும் மலேசியாவிற்கும் இடையிலான விரிவான உத்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேலும் வலுப்படுத்துவது குறித்து மலேசியா தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இப்பயணத்தின் போது, இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுகள் நடைபெறும் என்று மலேசியாவிற்கான இந்திய தூதர் திரு. பி.என். ரெட்டி கூறினார்.

நேற்று கோலாலம்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இந்தப் பயணத்தில், மலேசியாவில் வாழும் இந்திய வம்சாவளியினருடனான சந்திப்பு ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்தும் விதமாக, கோலாலம்பூரில் Selamat Datang Modi Ji என்ற தலைப்பிலான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதில் அந்நாட்டு கலைஞர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக திரு. பி.என். ரெட்டி தெரிவித்தார்.

>>>>><<<<

தேசிய பருப்பு வகைகள் தன்னிறைவு இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான தேசிய மாநாடு, மத்தியப் பிரதேச மாநிலம் செகோர் மாவட்டத்தில் உள்ள அம்லஹாவில் இன்று நடைபெறுகிறது.

மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், விஞ்ஞானிகள், அரசு விதை உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் பருப்புத் தொழில் துறை பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

பருப்பு உற்பத்தியை அதிகரிப்பது, பருப்பு உற்பத்தியில் தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் உள்பட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<

சட்டப்பேரவை தேர்தல் நேர்மையாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை மத்திய பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இதற்காக நியமிக்கப்பட்டுள்ள மத்திய பார்வையாளர்களுக்கான பயிற்சி முகாமை தேர்தல் ஆணையம் நடத்தியது.

புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த பயிற்சி முகாமில் உரையாற்றிய தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar, சட்டப்பேரவை தேர்தலில் பல்வேறு புதிய முன்னெடுப்புகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

சட்டப்படியும், தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படியும் பாரவையாளர்கள் செயல்பட வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

சரக்கு கையாளுதலை அதிகரிக்கவும், மொத்தமாக சிமெண்ட் மூட்டைகளை கொண்டு செல்லும் போக்குவரத்தை ஊக்குவிக்கவும் ரயில்வே மேற்கொண்ட சீர்திருத்தங்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது.

சரக்கு பெட்டகங்களில் சிமெண்ட்டைக் கொண்டு செல்வதற்காகப் பல சிமெண்ட் நிறுவனங்கள் பொதுத்துறை நிறுவனமான இந்திய சரக்கு பெட்டக கழகத்தை அணுகியுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில்களில் சரக்கு பெட்டகங்களில் கொண்டு செல்லப்படும் சிமெண்ட் மூட்டைகளுக்கான கட்டணத்தை, ஒரு டன்னுக்கு ஒரு கிலோமீட்டருக்கு 90 பைசாவிலிருந்து 85 பைசாவாக ரயில்வே சமீபத்தில் குறைத்துள்ளது.

இந்த நடவடிக்கையால் சிமெண்ட் கொண்டு செல்வதற்கான ஒட்டுமொத்த சரக்குக் கட்டணச் செலவு கணிசமாகக் குறையும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

பழம்பெரும் நடிகை திருமதி. எம்.என். ராஜம், மூத்த இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன் ஆகியோருக்கு 2024-25ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

விருதுடன் ரொக்கப் பரிசாக தலா 10 லட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

>>>><<<<

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்வதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியை அடுத்த மகிமண்டலத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வீட்டுமனைப் பட்டா, ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், சுமார் 300 பயனாளிகளுக்கு 3 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் முன்னோடித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவர்களுக்கான மடிக்கணினி உள்ளிட்ட திட்டங்கள் மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<

கருவுற்ற தாய்மார்கள், ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முக்கிய பங்காற்றி வருகிறது.

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டியில் நேற்று நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் பேசிய ஆட்சியர் திரு. சதிஷ், தாய்மார்கள் ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

>>>>><<<<

இருவரிச் செய்திகள்

இஸ்லாமாபாதில் உள்ள மசூதி மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஆப்கானிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கு, அந்நாடு மறுப்பு தெரிவித்துள்ளது.

>>>>><<<<

காஸா மக்களுக்கு உதவுவதற்காக 4 ஆயிரம் டன் நிவாரணப் பொருட்களுடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் கப்பல் எகிப்தில் உள்ள Arish துறைமுகத்திற்கு வந்துள்ளது.

>>>>><<<<

செயற்கை நுண்ணறிவு குறித்த சர்வதேச உச்சிமாநாடு இம்மாதம் 18ஆம் தேதி புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<

மணப்பாறை, கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் கடன்பெற்ற விவசாயிகளுக்கு, பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளை, துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

>>>>><<<<

அரியலூர் - சென்னை இடையேயான மிதவை பேருந்துகள் சேவையை போக்குவரத்து அமைச்சர் திரு. சிவசங்கர் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<

தொன்மையான கட்டிடங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்படவுள்ள பாரம்பரிய ஆணையத்தின் தலைவர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

>>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் நகர்ப்புறங்களில் உள்ள இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி வழங்கினார்.

>>>>><<<<

நீலகிரி மாவட்டம், குந்தா வனச்சரகத்தில் இரண்டு சிறுத்தைகள் மர்மமான முறையில் இறந்தது தொடர்பாக வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>><<<<

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நவ்லாக் ஊராட்சி மன்றத் தலைவர், அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>><<<<

உதகை அருகே சூட்டிங்மட்டம் பகுதியில் உலா வரும் ஒற்றை யானையை வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

>>>>><<<<

காஞ்சிபுரம், அருள்மிகு காமாட்சி அம்மன் ஆலயத்தில், தை மாத தங்கரத உற்சவம் நேற்று விமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

ஹராரே-யில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா, 100 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 411 ரன் எடுத்தது.

Vaibhav Sooryavanshi அதிரடியாக ஆடி 80 பந்துகளில் 175 ரன் குவித்தார்.

412 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த இங்கிலாந்து 40 புள்ளி 2 ஓவரில் 311 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

Vaibhav Sooryavanshi ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை 6வது முறையாக வென்றுள்ள இந்திய அணியினருக்கு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், போட்டி முழுவதும் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தேசத்திற்கு இளம் வீரர்கள் பெருமை சேர்த்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வெற்றி, வரலாற்றுச் சிறப்புமிக்க மகத்தான சாதனை என்று குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பாக விளையாடிய இளம் வீரர் Vaibhav Sooryavanshi-க்கு பாராட்டு தெரிவித்த அவர், ஒட்டுமொத்த நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தமைக்காக அணித்தலைவர் Ayush Mhatre மற்றும் அணியினர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இக்கோப்பையை இந்திய அணி வென்றுள்ளது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்போட்டி முழுவதும் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றி இளம் விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், இப்போட்டியில் வைபவ் சூர்யவன்சி வெளிப்படுத்திய அபாரமான ஆட்டம். பல ஆண்டுகளுக்கு நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியா, இலங்கை இணைந்து நடத்தும் இந்த தொடரில் 20 அணிகள் பங்கேற்கின்றன.

இன்று கொழும்பில் காலை 11 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் – நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

பிற்பகல் 3 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் – ஸ்காட்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

மும்பை, வாங்டே மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – அமெரிக்காவை எதிர்த்து விளையாடுகிறது.

>>>>>END<<<<